விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆவணி 12 திங்கட்கிழமை (28.08.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 243

ராம்கோ RAMCO MADRAS CEMENTS LTD RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## இலங்கையில் வடக்குக்கிழக்குப் பகுதிகளில்

# 3 நாள் யுத்த நிறுத்தத்தை உருவாக்க

# நோர்வேயிடம் இந்தியா வலியுறுத்தல்

(ஒஸ்லோ)

வடக்குக்கிழக்கில் மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அரசு–விடுதலைப்புலிகளிடையே மூன்று நாள் போர்நிறுத்தம் ஒன்றை உருவாக்க வேண்டுமென இந்திய அரசு நோர்வேயிடம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கை போர்நிலைமைகள் குறித்து நோர்வேயின் சிறப்புத்தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் மற்றும் ஹான்சன் பௌயருடன் ஆலோசனை நடத்திய இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலர் சியாம் சரண் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலைகள் ஆரம்பமாவது குறித்து உத்தியோகபூர்வ அறிவிப்புக்களில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இன்று பாடசாலைகளை ஆரம்பது குறித்து எந்தவித உத்தியோக பூர்வ அறிவித்தல்களும் வெளிடப் படவில்லை.

மூன்றாம் தவணைக்காக கொழும்பிலுள்ள சில பாடசாலைகளை தவிர ஏனைய பாடசாலைகள் இன்று திறக்கப்படவுள்ளன.

எனினும் யாழ்ப்பாணத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கும் ஊரடங்கு சட்டத்தினால் பாடசாலைகளை ஆரம்பிப்பதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

எனினும் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் நேரத்தில் பாடசாலைகள் நடைபெறும் என கல்வி அமைச்சை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியிருந்தன.

இதேவேளை யாழ்.குடாநாட்டில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தின் மத்தியில் பாடசாலைகளை இன்று ஆரம்பிப்பது குறித்து தன்னுடன் கல்விப்பணிப் (04 ஆம் பக்கம் பார்க்க)

## மோதல்களை முடிவுக்குக் கொண்டுவர இந்தியாவிடம் ஜனாதிபதி வேண்டுகோள்



(கொழும்பு)

இலங்கையில் விடுதலைப்புலிகள் மற்றும் இராணுவத்தினருக்கிடையே நடந்து வரும் சண்டையை முடிவுக்குக் கொண்டுவர இந்தியா முக்கிய பங்காற்ற வேண்டுமென ஜனாதிபதி ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்

இந்தியா ஒரு முக்கியமான நாடு என்பது எங்களுக்குத் தெரியும்.

எனவே மற்றைய நாடுகளை விட இந்தியாவை முதலாவதாக தேர்வுசெய்துள்ளோம். இராணுவ உதவி மட்டுமல்ல எல்லாவற்றிலும் உதவவேண்டும்.

இந்தியா மறுத்துவிட்டால் மட்டுமே வேறு

## சு.ப.தமிழ்ச்செல்வனுடன் செ.ச.பிரதிநிதிகள் சந்திப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசினர்.

கிளிநொச்சியில் உள்ள தமிழீழ அரசியல்துறை நடுவப்பணியகத்தில் நேற்று முன்தினம் இச் சந்திப்பு நடைபெற்றது.

தற்போதைய சூழ்நிலையில் மேற்



(கொழும்பு)

இலங்கையில் விடுதலைப்புலிகள் மற்றும் இராணுவத்தினருக்கிடையே நடந்து வரும் சண்டையை முடிவுக்குக் கொண்டுவர இந்தியா முக்கிய பங்காற்ற வேண்டுமென ஜனாதிபதி ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு இடையிலான சண்டையில் அமைதியை நிலைநாட்டுவதில் இந்தியா ஒரு முக்கியமான நாடு என்பது எங்களுக்குத் தெரியும்.

எனவே மற்றைய நாடுகளை விட இந்தியாவை முதலாவதாக தேர்வுசெய்துள்ளோம். இராணுவ உதவி மட்டுமல்ல எல்லாவற்றிலும் உதவவேண்டும்.

இந்தியா மறுத்துவிட்டால் மட்டுமே வேறு நாட்டை தேர்ந்தெடுப்பது குறித்து ஆராயப்படும். சந்திரிகா (04 ஆம் பக்கம் பார்க்க)

செல்வனை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசினர்.

கிளிநொச்சியில் உள்ள தமிழீழ அரசியல்துறை நடுவப்பணியகத்தில் நேற்று முன்தினம் இச் சந்திப்பு நடைபெற்றது.

தற்போதைய சூழ்நிலையில் மேற்கொள்ளப்படுகின்ற மனிதாபிமான நடவடிக்கைகள் குறித்து இச் சந்திப்பில் விவாதிக்கப்பட்டது.

சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின் ஆசிய இயக்குநர் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின் வதிவிடப் பிரதிநிதி தூன் வன்டென் ஹொவ் இச் சந்திப்பில் பங்கேற்றனர். (ச)

# ஆட்டோ சாரதி சுட்டுக்கொலை

(திருகோணமலை)

திருகோணமலையில் அடையாளம் தெரியாத நபர்களால் ஆட்டோ சாரதி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

திருகோணமலை லிங்கநகரில் நேற்று முற்பகல் 10.05 மணியளவில் இச் சம்பவம் நடைபெற்றது.

கொல்லப்பட்ட நபர் மொகமெட் ஜெஃப்ரி அப்துல்லா என்றும் அவர் இராணுவத்துடன் தொடர்பு வைத்திருந்தவர் என்றும் இராணுவத்தரப்பினர் தெரிவித்துள்ளனர். (ச-5)

# கிளைமோர் தாக்குதலில் 7 இராணுவத்தினர் காயம்

மூதூரில் நேற்று நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் 7 இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர். மூதூர் செல்வநகரில் நேற்றுக் காலை 9 மணிக்கு இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத் தாக்குதலில் படுகாயமடைந்த ஏழு பேரும் பொலநறுவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச-5)

# மல்லாகத்தில் குடும்பஸ்தர் நேற்றுச் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் பழைய நீதிமன்ற வீதியில் வைத்து குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். நேற்றுக் காலை 11.30 மணியளவில் இவர் சுடப்பட்டுள்ளார்.

சுடப்பட்டவர் அதே இடத்தைச்சேர்ந்த அப்பாச்சிப்பிள்ளை அமிர்தலிங்கம் (வயது 41) எனத் தெரிவிக்கப்பட்டது.

இம் மரணம் தொடர்பாக சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணை மேற்கொண்ட மல்லாகம் மாவட்ட நீதிபதி சரோஜினி இளங்கோவன் பிரேதபரிசோதனையின் பின் உறவினர்களிடம் சடலத்தை ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (04 ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்கத்துடன் இணையுமாறு ஐக்கிய தேசியக்கட்சிக்கும் அழைப்பு

## ஜே.வி.பி.கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தில் இணையுமாறு ஐக்கிய தேசியக்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித்தலைவர் கருஜெயசூரியவிடம் இது தொடர்பில் ஜனாதிபதி கடிதம் கொடுத்து அனுப்பியதாக தெரிவிக்கப்பட்டது.

அரசாங்கத்தின் அமைதி முயற்சிகளுக்கான ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவைக் கோரும் கடிதம் அது என்று முதலில் கூறப்பட்டதாகவும் ஆனால் அது உண்மையில்லை, அரசாங்கத்தில் இணைவதற்கு அழைப்பு விடுத்தே மகிந்த எழுதிய கடிதம் என்றும் ஐக்கிய தேசியக்கட்சி (04 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியாவில் நேற்று இரு சடலங்கள் மீட்பு

(வவுனியா)

வவுனியா சமனன்குளம் வீதியில் அடையாளம் காணப்படாத இரண்டு ஆண்களின் சடலங்கள் நேற்றுக் காலை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அவர்களின் தலையில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் இரவு சுடப்பட்டிருக்கலாம் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

30,35 வயது மதிக்கத்தக்க இவர்கள் இருவரும் நீண்ட காற்சட்டையும் சேட்டும் அணிந்து காணப்பட்டதாகவும் சடலங்கள் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ச-7)

# விடுதலைப்புலிகளின் முக்கிய வளங்கள் யாழ்.சமரில் பயன்படுத்தப்படவில்லை!

## சண்டே ரைம்ஸ் கட்டுரையில் இக்பால் அத்தாஸ்

யாழ்.சமரில் தமிழீழ விடுதலைப்புலிகள் கையாண்டு வரும் சில உத்திகள் தொடர்பில் அரச புலனாய்வு அமைப்பும் சர்வதேச புலனாய்வு அமைப்புக்களும் விடை தேடி வருவதாக இராணுவம் தொடர்பான பத்தி எழுத்தாளர் இக்பால் அத்தாஸ் குறிப்பிட்டுள்ளார்.

சண்டே ரைம்ஸ் வார இதழில் நேற்று வெளியான அவரது கட்டுரையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

கொழும்பில் உள்ள புலனாய்வு அமைப்புக்கள் மட்டுமன்றி சர்வதேச புலனாய்வு அமைப்புக்களின் மத்தியிலும் பல விடை தெரியாத கேள்விகள் உள்ளன.

விடுதலைப்புலிகள் தங்களது சில வளங்களை இந்த சமரில் பயன்படுத்தவில்லை என்பதுதான் அந்தக் கேள்வி. அது தொடர்பிலான சில விடயங்கள் இன்னமும் தெளிவுபடுத்தப்படாமலேயே உள்ளன.

இரணைமடு நீர்த்தேக்கம் அருகே 14 கிலோமீற்றர் நீளமுள்ள விமானத் தளத்தை விடுதலைப்புலிகள் அமைத்திருப்பதாகக் கூறியிருக்கின்றோம். தமிழீழ விடுதலைப் புலிகளிடம் 5 இலகு ரக விமானங்கள் இருப்பதாகவும் சர்வதேச புலனாய்வு அமைப்பு ஒன்று உறுதி செய்து அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளது.

வான்வழித் தற்கொலைத் தாக்குதலுக்கு இந்த விமானங்களைப் பயன்படுத்தக் கூடும் என்ற அச்சமும் உள்ளது. ஆனால் விடுதலைப்புலிகள் அதனைப் பாவிக்கவில்லை.

தரையிலிருந்து வானில் சென்று தாக்குதல் நடத்தும் ரஷ்ய தயாரிப்பான எஸ்.ஏ-7 என்ற ஏவுகணை விடுதலைப்புலிகளிடம் உள்ளது.

மூன்றாம் ஈழப்போரில் விமானப் படையின் பயணிகள் விமானத்தை 1995 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தாக்கியபோது இது பயன்படுத்தப்பட்டது.

இந்த ரக ஏவுகணைகளின் பயன்பாட்டுக் காலம் குறைவானதுதான். அப்படியான நிலையில் அண்மையில் அமெரிக்காவில் கைது செய்யப்பட்ட தனி என்பவர் விடுதலை புலிகளிடம் இத்தகைய ஏவுகணைகள் இருப்பதாகக் கூறியுள்ளார்.

தங்களது விமானத் தளத்தைப் பாதுகாப்பதற்கான விமானப் படைப் பாதுகாப்பு சாதனங்களை விடுதலைப்புலிகள் வைத்திருப்பதாக கடந்த ஆண்டு எழுதியிருந்தோம்.

இரணமடு விமானத் தளத்திற்கு மேலாக மூன்று விமான உலங்கு வானூர்திகள் ஏவுகணைகளுடன் பறந்த நிலையில் இது தெரிவிக்கப்பட்டது.

எஸ்.ஏ-7 தரையிலிருந்து வானை நோக்கித்தாக்குதல் ஏவுகணையானது விரைந்து சென்று தாக்காது என்பதால் அமெரிக்காவில் எஸ்.ஏ-18 ரக ஏவுகணைகளை வாங்க முயற்சித்தாகத் தெரிவித்துள்ளனர்.

மேலும் விமானத்தளத்தில்பயன்படுத்தப்படும் பல தளபாடங்கள் குறித்தும் அமெரிக்க புலனாய்வு அமைப்பினரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்படியான நிலையில் விடுதலைப்புலிகள் ஏன் விமானத் தளத்தைப் பயன்படுத்தவில்லை?

விடுதலைப்புலிகளின் பலமாகவுள்ள கடற்புலிகளை தற்போதைய சமரில் பெருந் தொகையில் பயன்படுத்தப்படவில்லை. விமானப் படையின் தாக்குதல் காரணமாகவா? அல்லது திட்டமிட்ட வகையில் நகர்த்தப்பட்டுள்ளனரா?

ஓகஸ்ட் 17 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 18 ஆம் திகதி வரை இராணுவ அதிகாரிகள் மற்றும் 141 இராணுவத்தினர் குடாநாட்டில் கொல்லப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது. மேலும் இரண்டு அதிகாரிகள் மற்றும் 21 இராணுவத்தினரை காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலகட்டத்தில் 43 அதிகாரிகள் மற்றும் 685 இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாவிலாறு அணைக்கட்டுச் சமரில் 12 அதிகாரிகளும் 28 இராணுவத்தினரும் கொல்லப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

யூலை 26 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் சனிக்கிழமை வரைமொத்தம் 278 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். இராணுவத்தைச் சேர்ந்த 246 பேர்-கடற்படையில்-9, விமானப்படையில்- 2, பொலிஸாரில்- 44, ஊர்காவல் படையில்- 7, யாழ்.சமரில் 800 போராளிகள் இறந்தனர்என்று இராணுவம் தெரிவித்துள்ளது. ஆயிரத்திற்கும் அதிகமானோர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் சுயாதீனமாக விசாரித்தமையில் இந்த எண்ணிக்கை சாத்தியமற்றது என்று இக்பால் அத்தாஸின் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## வெளிமாவட்ட கல்வி உத்தியோகஸ்தர்களை யாழ்.கல்வித் திணைக்களத்திற்கு அழைப்பு

வெளிமாவட்டங்களை சேர்ந்த கல்விப் பணியாளர்களை இன்று காலை யாழ்.மாவட்ட கல்வித் திணைக்களத்தில் அவர்களது விபரங்களை பதிவு செய்யுமாறு மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

விடுமுறைக்காக யாழ்ப்பாணம் வந்து கடமைக்குச் செல்ல முடியாது இருக்கும் வெளிமாவட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகள், கல்வி சார்பணியாளர்கள் ஆகியோரையே கல்வித்திணைக்களத்திற்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

அவர்களின் விபரங்களை மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்க வேண்டியுள்ளதால் தவறாது தமது விபரங்களைப்பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச)

## சிறுவர்களுக்கான ஆற்றுப்படுத்தல் சேவை

யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தினர் நாட்டின் தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாக ஏற்பட்ட நிலைமையில் அகதிகளாகவுள்ள மக்களுக்கு முகாமைத்துவத்தினையும் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான ஆற்றுப்படுத்தல் செயற்பாட்டினையும் சில இடைத்தங்கல் முகாம்களில் நடத்தி வருகின்றனர்.

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி, புனித சாள்ஸ் மகாவித்தியாலயம், திருக்குடும்ப கன்னியர் மட ஆங்கிலப் பாடசாலை, புனித மரியன்னை பேராலயம், புனித யாகப்பர் ஆலயம் ஆகிய இடங்களில் உள்ள முகாம்களிலேயே மேற்படி செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. (ச)

## கொழும்பில் நேற்று பாரிய தேடுதல்!

கொழும்பு மாநகரில் சனநெரிசல் மிக்க பகுதிகளில் நேற்று விசேட சோதனை நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இச் சோதனை நடவடிக்கையில் முப்படையினரும் ஈடுபடுத்தப்பட்டனர்.பிற்பகல் 3 மணிமுதல் 6 மணிவரை மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது தம்மை அடையாளம் காட்டத்தவறிய 78 பேர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கொள்ளுப்பிட்டி மற்றும் பெரளை உட்பட்ட பகுதிகளிலேயே இத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. (ச)

## வடக்கில் இடம்பெயர்ந்தோர் விபரம் வெளியிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கில் இடம்பெயர்ந்தோர் குறித்த முழு விபரங்களை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் அமைப்பான யு.என்.எச்.சி.ஆர். வெளியிட்டுள்ளது.

வடக்கில் இடம்பெயர்ந்த மக்களின் தொகை வருமாறு;

ஊர்காவற்றுறை-2850, காரைநகர்-231, யாழ்ப்பாணம்-24875, வேலணை-3796, நல்லூர்-2460, வலிகாமம் மேற்கு சங்கானை-164, தென்மராட்சி; சாவகச்சேரி-9607, வடமராட்சி தென்மேற்கு; கரவெட்டி-1640, வலிகாமம் தெற்கு; உடுவில்-21, வலிகாமம் தென்மேற்கு; சண்டிலிப்பாய்-361, வடமராட்சி கிழக்கு புலிகளின் நிர்வாகப் பகுதி-1065, மொத்தம்-47070.

கிளிநொச்சி மாவட்டம்-35357, முல்லைத்தீவு மாவட்டம்-10080, மன்னார் மாவட்டம்-8460, வவுனியா; அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகள்-1060, விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதிகள்- 8500, மொத்தம்-9560. (ச-5)

## புளூட்டோ இனிக் கோளல்ல

சூரியக் குடும்பத்தில் இருக்கும் ஒன்பது கோள்களில் ஒன்றான புளூட்டோ இனிமேல் கோள் என்று கருதப்படமாட்டது என்று சர்வதேச வானவியல் கழகம் முடிபெடுத்துள்ளது.

செக் குடியரசின் தலைநகரான பிராக்கில் கூடிய இந்தக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் சூரியக் குடும்பத்தின் கோள்கள் எவை என்று நிர்ணயிப்பதற்கான அடிப்படை தகுதிகள் சிலவற்றை வரையறை செய்துள்ளனர்.

இந்த புதிய தகுதிகளின் அடிப்படையில் பார்த்தால் புளூட்டோ இனிமேல் ஒரு கோளாக கருதப்பட முடியாது என்று இந்த விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

ஆனால் 1930 ஆம் ஆண்டு அமெரிக்காவினைச்சேர்ந்த கிளைட் டாம் பெவுக்வினால் கண்டு பிடிக்கப்பட்ட புளூட்டோவுக்கு ஆதரவாக உலகின் பல பகுதிகளிலிருந்தும் வானியல் விஞ்ஞானிகள் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ச)

## பொன்னாலை வரதராஜப் பெருமாளுக்கு இன்று திருவிழா ஆரம்பமாகின்றது!

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்தத் திருவிழாவை நடத்துவதற்குக் கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

ஆலய பரிபாலன சபையின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ்.மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா கடற்படையின் உயர் அதிகாரி அஜந்த விக்கிரமவுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின்போது இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து இன்று கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகவுள்ளது. எதிர் வரும் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் தேர் மற்றும் தீர்த்தத் திருவிழா நடைபெறவுள்ளது.

திருவிழாவுக்கு மக்கள் செல்வதற்கும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. (ச-49)

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் ஏறாவூரில் சுட்டுக் கொலை

ஏறாவூர் பொலிஸ் பிரிவில் உள்ள சித்தாண்டிப் பிரதேசத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் இனந்தெரியாத ஆயுதக் குழு ஒன்றினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 8.15 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒரு பிள்ளையின் தந்தையான எஸ்.சக்திவேல்(வயது-35) மற்றும் இரண்டு பிள்ளைகளின் தாயான எஸ்.விமலகுமாரி (வயது-44) ஆகியோரே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ச-7)

## மேலும் மூவர் நேற்று மரணம்

(யாழ்ப்பாணம்)

முகமாலையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்த இராணுவத்தினரின் எண்ணிக்கை 9 ஆக உயர்ந்துள்ளது.

முகமாலையில் வீதிச் சுற்றுக் காவலில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் பலர் படுகாயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## ஈழ அகதிகளின் எண்ணிக்கை 10 ஆயிரத்தைத் தாண்டியது

இவ்வருட ஜனவரி 12 ஆம் திகதி தொடங்கி தமிழகம் வந்து சேர்ந்திருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளின் எண்ணிக்கை 10 ஆயிரத்தையும் தாண்டியுள்ளதாகத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.கடந்த சனிக்கிழமை அன்று 160 அகதிகள் வந்து சேர அகதிகளின் எண்ணிக்கை 10 ஆயிரத்து 15 ஆக ஆனது எனவும் மேலும் 200 பேர் ஞாயிறன்று இராமேஸ்வரம் வந்திருப்பதாக தமிழ் நாட்டிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஏப்ரல் மாதம் இலங்கை இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீதான தாக்குதலுக்கு பிறகு தமிழர் பகுதிகளில் நடத்தப்பட்ட குண்டு வீச்சுகளின் பின்னணியில் அகதிகள் பெரும் எண்ணிக்கையில் இந்தியா வரத் தொடங்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை இந்தியாவில் இராமநாதபுரம் மாவட்டத்தில் மண்டபம் அகதி முகாமில் தங்கியிருப்போரின் வசதிக்காக 11 லட்சம் ரூபா செலவில் புதிய கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன என மாவட்ட ஆட்சித் தலைவர் கே.எஸ். முத்துச்சாமி தெரிவித்துள்ளார். (ச-5)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு திருவெண்காடு திருவருள் மிகு சித்தி விநாயகர் தேவஸ்தான மஹோற்சவம் நாளை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் ஆறாம் திகதி பகல் 10.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

மஹோற்சவங்கள் இளவாலை ஆனைவிழுந்தான் பிள்ளையார் கோவில் குருக்கள் சிவாகம கிரியாதத்துவநிதி சிவஸ்ரீ இராம பாலச்சந்திரக் குருக்களினால் மேற்கொள்ளப்படவுள்ளது. (ச)

நிர்வாகத் துறையிலோ, சமூகத்திலோ அல்லது வேறு எந்த குறிப்பிட்ட வேலையிலோ தற்காலிகமாக ஏற்படும் கஷ்டங்களைக் கண்டு மனம் குழப்பமடைந்து விடாதீர்கள்.
—ராஜாஜி

வலம்புரி

# அரச சார்பற்ற நிறுவனங்கள் அவசரப்பட்டு விட்டன

யாழ்.குடாநாட்டில் ஏற்பட்ட யுத்தத்தையடுத்து யாழ்.மாவட்டத்தில் இயங்கிய பல தொண்டர் நிறுவனங்கள் தமது பணியை நிறுத்திவிட்டு கொழும்பிற்கு பயணமாகியுள்ளன.

மீண்டும் அவர்களின் சேவை யாழ்.மாவட்டத்திற்கு கிடைக்குமா? என்ற கேள்வி எழுந்துள்ள போதிலும் யாழ்.மாவட்டத்தில் இயங்கிய தொண்டு நிறுவனங்கள் தமது சேவையை முடிவுறுத்திவிட்டு கொழும்புக்குப் பயணமாகியமை யாழ்.மக்களை அநாதரவாக்கும் செயல் என்றே கூறவேண்டும்.

1995ஆம் ஆண்டு யாழ்.குடாநாடு இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள்வந்ததையடுத்து மீளவும் யாழ்ப்பாணத்தில் குடியமர வந்த மக்கள் தமது உயிருக்கு உத்தரவாதம் அற்ற நிலையிலேயே இருந்தனர்.

இந்நிலையிலேயே சர்வதேச தொண்டர் அமைப்புக்கள் யாழ்ப்பாணத்தில் தமது பணியை ஆரம்பிக்கத் தொடங்கினர்.

குறித்த தொண்டர் நிறுவனங்களின் பணியினால் கிடைத்த பயன்பாடு என்பதற்கப்பால் அந் நிறுவனங்கள் இருப்பினால் யாழ்ப்பாண மக்கள் ஏதோ ஒரு வகையில் ஆறுதல் அடைந்தனர்.

சர்வதேச சமூகத்தின் பார்வை-அவதானிப்பு யாழ்ப்பாணத்தில் இருப்பதால் தமிழ் மக்களின் அவல நிலை உலகிற்கு எடுத்துக் கூறப்படும் என்ற நம்பிக்கை இருந்தது.

ஆனால் இந்த நம்பிக்கையை வீணடிக்கும் வகையில் சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் தற்போது நடந்து கொண்டுள்ளன.

யுத்த சூழ்நிலையில் தமிழ் மக்கள் அகதிகளாகப் பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் அடைக்கலம் புகுந்துள்ள நேரத்தில் சர்வதேச தொண்டர் அமைப்புக்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறியமை வேதனைக்குரியதே.

யாழ்ப்பாண மக்களுக்கு உதவுவதே அந் நிறுவனங்களின் நோக்காக இருக்குமாயின் இந் நேரத்தில் அவற்றின் சேவை தமிழ் மக்களுக்குக் கிடைக்க வேண்டும்.

எனினும் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் பல யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறியமை துரதிஷ்டவசமானதாயினும்,

யாழ்ப்பாண மக்கள் துன்பம் துயரங்களை வெளியுலகத்திற்கு எடுத்துக் கூறும் தார்மீகப் பொறுப்பு யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிய சர்வதேச தொண்டு நிறுவனங்களுக்கு உண்டு.

இங்குள்ள சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் யாழ்ப்பாண மக்களின்-தமிழ் மக்களின் உண்மை நிலையை பக்க சார்பற்ற முறையில் உலகிற்கு எடுத்துக் கூறியிருந்தால் ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட நாடுகள் விடுதலைப்புலிகளைத் தடைசெய்யும் நிலைமை ஏற்பட்டிருக்க மாட்டாது என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும்.

# மாணவர் விடுதிகள் சோதனையிடுவதை இராணுவம் நிறுத்திக் கொள்ள வேண்டும்

## கலைப்பீட மாணவர் ஒன்றியம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக வளாகமும் மாணவர் விடுதிகளும் கடந்த 19.08.2006அன்று சுற்றிவளைக்கப்பட்டு கடுமையான முறையில் இராணுவத்தினரால் சோதனையிடப்பட்ட சம்பவமானது அனைத்து மாணவர்களையும் உயிர் அச்சுறுத்தல் விடுவதாக அமைந்து காணப்படுகின்றது என பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக அன்றைய தினம் மாணவர்கள் தங்கும் விடுதிகளை சுற்றி வளைத்த படையினர் ஆண்கள், பெண்கள் என்ற வேறுபாடின்றி அனைவரையும் தனித்தனியாக விசாரணை செய்து அவர்களுடைய விபரங்களை பதிவு செய்ததுடன் மிக முக்கியமாக உயிர் அச்சுறுத்தல் ஏற்படக் கூடிய வகையில் ஒவ்வொரு மாணவ மாணவிகளையும் தனித் தனியாக வீடியோ மற்றும் புகைப்படம் எடுத்துச் சென்றுள் ளனர்.

இதனால் இன்று ஒவ்வொரு மாணவனும் தனக்கு அடுத்த கணம் என்ன நிகழுமோ என்ற அச்ச உணர்வுடனே இருக்க வேண்டியுள்ளது.

அதேநாள் பல்கலைக்கழக மாணவ ஒன்றியத் தலைவர் தன்னுடைய அலுவலக அறையில் தங்கி நின்றபோது படையினரால் கைது செய்யப்பட்டார். அந்த மாணவர் எதுவித குற்றங்களும் இழைக்காத போதும் கைது செய்யப்பட்டார்.

எனவே அவரை விடுதலை செய்வதற்கு உடனடியாகநடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

இதன் தொடர்ச்சியாக மறுநாள் 20ஆம் திகதியன்றும் பல்கலைக்கழகம் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. எனவே தொடர்ச்சியாக பல்கலைக்கழக மாணவர்களை அச்சுறுத்தக் கூடிய வகையில் படையினர் செயற்படுவதனையும் பல்கலைக்கழக மாணவர் விடுதி, வளாகம் என்பவற்றினுள் நுழைந்து சோதனை செய்வதையும் நிறுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம் எனத் தெரிவித்துள்ளது. (சு)

# ஏ-9வீதி திறக்கப்பட்டால் மட்டுமே 24 மணிநேர மின்சாரம் வழங்கப்படும்

## பிரதிப் பொது முகாமையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஏ-9 வீதி திறக்கப்பட்டால் யாழ்.மாவட்டத்திற்கு 24 மணிநேர மின்சாரத்தை வழங்க முடியும் என இலங்கை மின்சார சபையின் யாழ்.மாவட்ட பிரதிப் பொது முகாமையாளர் சண்முகநாதன் தெரிவித்தார்.

தற்போது டீசல் பற்றாக்குறையினால் 74 வீதமான மின்விநியோகத்தையே வழங்கக் கூடியதாகவுள்ளதாகவும் இதற்காக நாள்ஒன்றிற்கு சுமார் 57 ஆயிரம் லீற்றர் முதல் 62 ஆயிரம் லீற்றர் வரையிலான டீசல் தேவைப்படுகின்றது.

சீராக 24 மணிநேரம் மின்சாரத்தை விநியோகிப்பதற்கு சுமார் 90 ஆயிரம் லீற்றர் டீசல் தேவை. அதனை நாளாந்தம் பௌசரில் தரை வழிப் பாதையூடாகக் கொண்டு வரப்பட்டதாகவும் தெரிவித்த அவர் தற்போது டீசலை கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டு அரச அதிபர் ஊடாக தமக்குத் தேவையான டீசலை நாளாந்தம் பெற்றுக் கொள்வதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை மின்சார சபை ஊழியர்களும் வாகனங்களும் ஏ-9 வீதி மூடப்பட்டதால் கிளிநொச்சியில் நிற்பதாகக் கூறிய அவர்,அவர்களும் கடமைக்கு சமூகமளித்தால் ஓரளவு ஊழியர் பற்றாக்குறை நீங்கும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை மின்சாரம் வழங்கப்படும் நேரத்தில் அதனைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை தற்போது காலை 6 மணி முதல் 8 மணி வரையும் அதன்பின் ஊரடங்கு தளர்த்தப்படும் நேரத்திலும் இரவு 7 மணிமுதல் 11 மணிவரையும் அனைத்துப் பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (சு-5)

# கப்பலில் வந்த மா முழுவதும் பாண் தயாரிப்புக்கு பகிர்ந்தளிப்பு

(யாழ்ப்பாணம்)

இரண்டு வாரங்களுக்கு பாண் உற்பத்தி செய்வதற்குப் போதுமான 200 மெற்றிக்தொன் மா யாழ்.மாவட்டத்தில் உள்ள 62 பேக்கரிகளுக்கும் பகிர்தளிக்கப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

தற்போது யாழ்.வந்த கப்பலில் கொண்டு வரப்பட்ட 200 மெற்றிக்தொன் மா அனைவருக்கும் பகிர்தளிக்க முடியாத நிலையில், அனைவருக்கும் கிடைக்கக் கூடிய வகையில் பாண் உற்பத்திக்கு வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதனடிப்படையில் வழங்கப்பட்ட மாவில் பேக்கரி உரிமையாளர்கள் பாணை மட்டுமே தயாரித்து மக்களுக்கு வழங்க முடி யும் எனவும் உற்பத்தி செய்யும் பாண் ஒன்றின் நிறை 450 கிராமாக இருப்பதுடன் அதன் விலை 28 ரூபாவாகவும் இருக்க வேண்டும் எனத் தெரிவித்த யாழ்.அரச அதிபர் இக் கட்டுப்பாடுகளை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (சு-5)

# யாழிலிருந்து புறப்பட்டவர்கள் கொழும்பைச் சென்றடைந்தனர்

யாழ்ப்பாணத்திலிருந்து செஞ்சிலுவைச் சங்கக் கப்பலில் திருகோணமலைக்குச் சென்ற 161 பயணிகள் அங்கிருந்து கொழும்பைச் சென்றடைந்தனர். யாழ்.குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த வெளிநாட்டுப் பிரஜைகள் சிலர் நேற்று கப்பல் மூலம் திருகோணமலையைச் சென்றடைந்தனர்.

அங்கிருந்து செஞ்சிலுவைச் சங்கத்தின் வழித்துணையுடன் அவர்கள் பஸ்களில் கொழும்பு நோக்கிப் புறப்பட்டனர். நேற்று செருவா கப்பலில் சென்ற 161 பேரில் வெளிநாட்டுப் பிரஜைகள், அவசர நோயாளர்கள் மற்றும் மரண நிகழ்வுக்காகச் சென்றவர்கள் அடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (சு)

# ஐரோப்பிய பாராளுமன்றம்முன் ஈழத் தமிழர்கள்ஆர்ப்பாட்டம்

ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றத்தின் முன்னால் எதிர்வரும் 6 ஆம் திகதி ஈழத் தமிழர்கள் கண்டனப் பேரணியை நடத்தவுள்ளனர். அப்பேரணியில் பின்வரும் கோரிக்கைகளை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிடம் விடுக்கவுள்ளனர்.

பேரணிக்கான முழு ஏற்பாடுகளும் பூர்த்தி அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. அவர்களின் கோரிக்கைகள் வருமாறு;

ஐரோப்பிய அரசிடம் நீதி கேட்டும் தமிழ் மக்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணயத்தை அங்கீகரிக்க வேண்டும்.

தமிழினத்தின் காப்பரணாக நிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது ஐரோப்பிய அரசு கொண்டு வந்த தடையின் பின்னர் ஏற்பட்டதமிழ் மக்கள் உயிரிழப்புகளுக்கு ஐரோப்பிய அரசு சொல்லப் போகும் உண்மையான பதில் என்ன?

யாழ்.குடாவில் சிக்கி நிற்கும் தமிழ் மக்களை உடனடியாக காப்பாற்ற ஐரோப்பிய அரசும் சர்வதேச அமைப்புகளும் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழர் தாயகப் பகுதிகளில் ஆக்கிரமித்து முற்றுகையிட்டு நிற்கும்இராணுவம் உடனடியாக தமிழ் மண்ணை விட்டு வெளியேற ஆவன செய்ய வேண்டும்.

தமிழ் மக்களின் உண்மைச் செய்திகள் வெளியில் வராது இலங்கை அரசினாலும் வெளிநாடுகளிலும் இருட்டடிப்புச் செய்யப்படுகின்றன இவை போன்ற கோரிக்கைகள் முன் வைக்கப்படவுள்ளன. (சு-5)





பருத்தித்துறையில் இருந்து புறப்பட்ட செஞ்சிலுவைச்சங்கக் கப்பல் திருகோணமலை துறைமுகத்தில் தரித்து நிற்பதையும் அதில் சென்ற பயணிகள் பொலிஸாரால் சோதனையிடப்படுவதையும் படங்களில் காணலாம்.

# யாழ்ப்பாணப் பகுதிகளில் நேற்றிரவு குண்டுச் சத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் முன்னரங்கப் பகுதிகளில் நேற்றிரவு மோதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

நேற்றிரவு கரையோரப் பகுதிகளில் வேட்டுச்சத்தங்களும் பீரங்கிச்சத்தங்களும் கேட்ட வண்ணம் இருந்தன.

இராணுவத்தினரால் ஆட்லறி மற்றும் பல்குழல் தாக்குதல்களும் இடையிடையே மேற்கொள்ளப்பட்டன.

இதனால் யாழ்ப்பாணப்பகுதிகள் அதிர்ந்த வண்ணம் இருந்தன. எனினும் மோதல் கள் குறித்தோ ஏற்பட்டசேதம் குறித்தோ உறுதிப்படுத்த முடியவில்லை. (ச)

# நீர்மூழ்கிக் கப்பலைப்பெற விடுதலைப்புலிகள் முயற்சி

(வோஷிங்டன்)

விடுதலைப்புலிகளின் முக்கிய நபரான சுரேஷ் ஸ்ரீஸ்கந்தராசா அல்லது வோட்டர்லூ சுரேஷ் என அழைக்கப்படுபவர் பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்றிடம் இருந்து 22 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான நீர்மூழ்கிக்கப்பல் ஒன்றையும்,யுத்தக்கப்பல் வடிவமைப்புக்கான மென்பொருளையும் கொள்வனவு செய்ய முயன்றுள்ளார் என அமெரிக்க சமஷ்டி புலனாய்வுத்துறை விசாரணைப் பணியகம் தெரிவித்துள்ளது என்று ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இந்த பிரிட்டிஷ் நிறுவனம் பிரிட்டிஷ் மத்திய அரசாங்கத்துடனும் பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சுக்களும் இணைந்து பாதுகாப்பு அமைச்சுக்கான வர்த்தக ரீதியாக போர்க்கப்பல் தயாரித்தும் நீர்மூழ்கிக்கப்பலுக்காக வடிவமைத்தல், மென்பொருள் பகுப்பாய்வு ஆகியவற்றில் ஈடுபட்டு வருவது என்றும் மேற்படி பணியகம் குறிப்பிட்டுள்ளது.

இந் நிறுவனம் 60 மில்லியன் ஸ்ரேலிங் பவுண் பெறுமதியான யுத்தக்கப்பல் உட்பட இதர பொருட்களை பாதுகாப்பு அமைச்சுக்காக உருவாக்குகின்றது.

கனடாவில் வசிக்கும் சுரேஷ் ஸ்ரீஸ்கந்தராசா மின்னஞ்சலோடு இணைந்து கொள்வனவுக்கான கோரிக்கையை அந் நிறுவனத்திற்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும் விசாரணைப்பணியகம் விளக்கியுள்ளது. (ச-5)

# ஏ-9 பாதையை மீண்டும் திறக்க புலிகள் இணக்கம்; அரசு தயக்கம்

யாழ்.குடாநாட்டிலிருந்து நாட்டின் ஏனைய பகுதிகளுக்கான தரை வழிப்பாதையான ஏ-9 பாதையை மீளத் திறப்பதில் நெருக்கடிகளை அரசு எதிர்கொண்டுள்ளது.

ஏ-9வீதியை திறந்து விடுவதில் விடுதலைப்புலிகளின் தரப்பில் சாதகமான சமிஞைகள் காட்டப்பட்டுள்ளன என்றும் அரச தரப்பில் இவ் விடயம் தொடர்பில் தீர்க்கமான அறிவிப்புக்கள் ஏதும் வெளியாக வில்லை எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

முன்னரங்க நிலைப் பகுதியில் அண்மைய மோதல்களின்போது விடுதலைப்புலிகள் சொல்லிக்கொள்ளத்தக்க வெற்றி எதனையும் பெறவில்லை என்றே அரச தரப்பில் கூறப்படுகிறது.

எனினும் முன்னரங்க நிலைப் பகுதியில் இருந்து கணிசமான அளவுதூரம் படையினர் பின் தள்ளப்பட்டுள்ள நிலையில் தரை வழிப் பாதையை திறப்பதற்கு முன்னதாக மீண்டும் பழைய நிலைகளை சென்றடைய வேண்டியதோர் சூழ்நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

இதனை அடிப்படையாக வைத்தே கடந்த வெள்ளிகாலை இரு முனையிலான முன்னேற்ற நடவடிக்கையை படைத்தரப்பு முன்னெடுத்திருந்தது.

எனினும் அம் முயற்சி சொல்லிக்கொள்ளத்தக்க அளவில் வெற்றி அளிக்கவில்லை என்றும் கூறப்படுகிறது. (ச-5)

# சர்வதேச அரச சார்பற்ற நிறுவனத்தின் தலைவர் இலங்கையில் இருந்து வெளியேற்றம்

இலங்கையில் இருந்து சர்வதேச அரச சார்பற்ற நிறுவனத்தலைவரான பெப் கொல் வெளியேற்றப்பட்டுள்ளார்.

ஸ்பெயின் அரச சார்பற்ற நிறுவனத்தின் தலைவராக செயற்பட்டு வந்த பெப் கொல் சில மாதங்களுக்கு முன் நடத்திய நிகழ்ச்சி ஒன்றின் முடிபில் வழங்கிய சான்றிதழ்களில் இலங்கை இலட்சனை மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளின் இலட்சனையைக் பொறித்திருந்தார்.

இதனையடுத்து அவர் இலங்கையை விட்டு கடந்த யூலை 31 ஆம் திகதிக்கு முன்னதாக வெளியேற வேண்டுமென்று உத்தர விடப்பட்டது.

இலங்கையை விட்டு வெளியேறிய அவர் மீண்டும் சுற்றுலா விசாவில் திரும்பினார்.ஆனால் அவரை அனுமதிக்காமல் குடிவரவுத்திணைக்கள அதிகாரிகள் வெளியேற்றியுள்ளனர்.

இது விடயம்தொடர்பாக கடந்த வியாழக்கிழமை இலங்கை பாராளுமன்ற பொறுப்புக்குழுக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. (ச)

## மோதல்களை முடிபுக்குக்...

குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தபோது நான் அமைச்சராக இருந்தேன்.அப்போது எனக்கு இந்தியத்தலைவர்களுடன் இணக்கமான நல்லுறவு உண்டு.

பிரதமர் மன்மோகன் சிங்குடன் அரசியல் முறையில் எனக்கு நல்ல நட்பு உண்டு தெற்காசிய நாடுகளில் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே பாரம்பரியமாக நல்ல நட்பு உண்டு.

இலங்கையில் நிலவும் பிரச்சினையைத் தீர்ப்பதில் இந்தியா முக்கிய பங்கு வகிக்க வேண்டுமென எதிர்பார்க்கிறோம் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் இந்தியாவின் உதவியை உலக நாடுகள் முழுவதும் எதிர்பார்க்கின்றன. யாழ்ப்பாணம்,திருகோணமலை கடல் வழி மார்க்கத்தில் விடுதலைப்புலிகள் ஆயுதங்கள் கடத்துவதை இந்தியா தடுக்கநடவடிக்கை எடுக்கவேண்டும்.

தமிழகத்தலைவர்கள் இலங்கை தமிழர்களுக்கு மிக ஆதரவாகச் செயற்படுகின்றனர்.இலங்கை சண்டையை நிறுத்த அவர்களும் முயற்சி மேற்கொள்ளவேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ச-5)

## மல்லாகத்தில்...

இதேவேளை நேற்று முன்தினம் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் மல்லாகம் காளிகோயிலடியைச்சேர்ந்த சிதம்பரப்பிள்ளை சிவசங்கர் (வயது 27) என்பவர் வீரபத்திரர் கோயிலடியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

அவர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது சுடப்பட்டுள்ளார். இதைவிட நேற்று முன்தினம் மாலை சுன்னாகம் புன்னாலைக்கட்டுவன் வீதியில் முத்துக்குமாரு விஜயசுந்தரராஜா (வயது 41) என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டார். (ச-5)

## அரசாங்கத்துடன்...

வட்டாரங்கள் தெரிவித்தன.

நோர்வேயில் இருந்து ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியபின் இது குறித்து விவாதிக்கப்படவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.மகிந்த ராஜபக்ஷவின் இந்த அழைப்பு குறித்து ஜே.வி.பி.கடும் அதிருப்தி அடைந்துள்ளது.

அரசாங்கத்தில் ஐக்கிய தேசியக்கட்சி இணைவதைத்தடுப்போம் என அக்கட்சியினர் தெரிவித்துள்ளனர். (ச-5)

## பாடசாலைகள்...

பாளர்கள் எவரும் தொடர்பு கொள்ள வில்லையென யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

யாழ்பாணத்தில் முழுமையாக ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்படும்வரை பாடசாலைகளை ஆரம்பிப்பது சாத்தியம் இல்லை யென கல்வி அமைச்சின் செயலாளர் தியாகலிங்கம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## 3 நாள் யுத்த நிறுத்தத்தை உருவாக்க ...

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் கடந்த 23ஆம் திகதி நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல் ஹெய்ம் மற்றும் வெளிவிவகார அமைச்சர் கார் ஸ்டொரை இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சியாம் சரண் சந்தித்துப் பேசினார்.

இச் சந்திப்பின்போது இலங்கை நிலைமைகள் குறித்தும் இலங்கையில் பாகிஸ்தானிய ஆதிக்கம் அதிகரித்து வருகின்றமை , இந்திய புலனாய்வு அமைப்புக்களின் அறிக்கை குறித்தும் விவாதிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான புதிய பாகிஸ்தான் தூதுவராக விமானப்படையின் பிரதித்தளபதி நியமிக்கப்படுவது குறித்த தனது அதிருப்தியையும் நோர்வேயிடம் இந்தியா தெரிவித்துள்ளதாக தெரியவருகிறது.

இலங்கை போர் நிலைமைகளை குறித்து எரிக்சொல் ஹெய்ம் மற்றும் சிறப்புத்தூதுவர் ஹான்சன் பௌயருடன் சியாம் சரண் ஆலோசனை நடத்தினார்.

யுத்த சூழ்நிலையில் வடக்குக் கிழக்கில் ஒரு இலட்சம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். அவர்களுக்கான நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இதற்காக மூன்று நாள் போர்நிறுத்தத்தை கடைப்பிடிக்கவேண்டுமென்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழகத்திற்கான அகதிகளின் வருகையானது தமிழ் நாட்டு தமிழர்களிடையே ஒரு அமைதியற்ற நிலைமையை ஏற்படுத்தியிருப்பதாகவும் நோர்வேத் தரப்பினரிடம் சியாம் சரண் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைதி முயற்சிகளில் தென்னிலங்கையில் ஒரு மித்த கருத்து உருவாவதற்காக ரணிலின் ஐக்கிய தேசியக்கட்சியையும் மகிந்தவின் சுதந்திரக்கட்சியையும் இணைத்து செயற்படவைக்கவேண்டுமென்றும் இந்திய தரப்பில் வழமையான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள சம்பூர் குறித்த அச்சத்தை நோர்வேத் தரப்பினர் இந்தியாவிடம் தெரிவித்துள்ளனர்.

சம்பூரில் இருந்து விடுதலைப்புலிகள் விலகிக்கொள்ளவேண்டுமென்று இலங்கை அரசாங்கம் கோரிக்கை முன்வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தற்போதைய நிலையில் பல்வேறு விடயங்களை அடிப்படையாகக்கொண்டு மூன்று நாள் போர்நிறுத்தத்திற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் நோர்வே தரப்பினர் தெரிவித்தனர். (ச-5)


## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

எமது சங்கத்தின் அங்கத்தவர் யாவரும் இன்று 28.08.2006 திங்கட் கிழமை அன்று ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டு ஒரு மணித்தியாலத்தின் பின் அரச அதிபரால் வழங்கப்பட்ட மா விநியோகம் பற்றி கலந்துரையாடவேண்டி இருப்பதால் தவறாது சங்கக் காரியாலயத்துக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர்,
யாழ்.மா.பே.உ.சங்கம்.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 28.08.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.